# வரி இலக்கம் திறக்கும் திட்டம் தற்காலிகமாக ஒத்திவைப்பு நிதி இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

## நடைமுறை, தொழிநுட்பச் சிக்கல்கள் காரணமாம்!

சில நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் தொழிநுட்பச் சிக்கல்கள் காரணமாக அரச நிறுவனங்களில் வரி இலக்கம் திறக்கும் திட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதன்படி, அடுத்த மாதம் முதல் நடப்பு கணக்கு தொடங்கும் போதும் வாகனங்களை பதிவு செய்யும்போதும் புதுப்பிக்கும்போதும் "ரின்" இலக்கம் கட்டாயமாக்கப்படும் என்ற தீர்மானம் ஏப்ரல் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

ஆண்டுக்கு 12 இலட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் மட்டுமே வரி செலுத்தத் தகுதியுடையவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

18 வயது பூர்த்தியடைந்த அனைவரும் வரி இலக்கத்தை பெற வேண்டும் எனவும், அவை அனைத்தும் வரிப் பொறுப்புக்கு உட்பட்டவை அல்ல எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆகவே, ஏப்ரல் மாதம் முதல் நடப்புக் கணக்கு தொடங்குதல், கட்டிடத் திட்டங்களுக்கு அனுமதி கோருதல், வாகனப் பதிவு, உரிமம் புதுப்பித்தல் மற்றும் நில உரிமைப் பதிவு போன்றவற்றிலும் வரி இலக்கத்தை அவசியம் சமர்ப்பிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (04)



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 22 வெள்ளிக்கிழமை 12.01.2024 கதிர் 157

JITF 2024
14th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
14ஆவது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
முற்றவெளி மைதானத்தில்
JANUARY
19 | 20 | 21

## வரி இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நாளாந்தம் 25,000 பேர் பதிவு செய்கின்றனர்

நாளாந்தம் சுமார் 25,000 பேர் ரின் இலக்கத்திற்காக பதிவு செய்கிறார்கள் என உள்நாட்டு வருவாய்த் துறை பணியாளர்கள் அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜே.டி.சந்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரின் இலக்கத்தை கட்டாயமாக்குவதற்கான கால அவகாசத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நீடிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக பெப்ரவரி முதலாம் திகதி முதல் ரின் இலக்கத்தை வைத்திருப்பது கட்டாயம் என நிதி அமைச்சு அறிவித்திருந்தது. இதேவேளை, நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் ரின் இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் தலைவி பிணையில் விடுதலை

வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வவுனியாவிற்கு விஜயம் செய்த வேளை, போராட்டத்தில் ஈடுபட்ட வடகிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவி உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.



இதேவேளை, கைது செய்யப்பட்டவர்கள் அன்றைய தினம் மாலை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது சங்கத்தின் தலைவி 2➤

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்கள் நான்கு பழுது பார்ப்பின்றி முடங்கின!

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான நான்கு விமானங்கள் பழுதுபார்க்க வேண்டிய உதிரி பாகங்கள் இல்லாததால் அவற்றை சேவையில் ஈடுபடுத்த முடியாமல் இருப்பதாக அந்நிறுவனத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் போதுமான விமானங்கள் இல்லாமையினால் கடந்த வருடம் மாத்திரம் நூற்றுக்கணக்கான பயணங்களை இரத்தானதாகவும், அதேபோல் பல விமானப் பயண தாமதங்களும் ஏற்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முன்னர் இருபத்தி நான்கு விமானங்களைக் கொண்டிருந்தது, தற்போது பதினெட்டு விமானங்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தக்கூடிய மட்டத்தில் உள்ளன. பாவனையில் இல்லாத இரண்டு விமானங்களை திருப்பி அனுப்பி மூன்று புதிய விமானங்களை வாங்குவதற்கு முயற்சித்த போதும், நாட்டில் நிலவுகின்ற நிதி நெருக்கடியால், அந்த கொள்முதல்களும் நடைபெறவில்லை. 2➤

## மருந்து வாங்க பணமின்றி நோயாளிகள் பரிதாபமாக தமது உயிரிழக்கின்றனர்!

### மருந்தக உரிமையாளர் சங்கத் தலைவர்

நாட்டில் மருந்து விற்பனை சுமார் முப்பது வீதத்தால் குறைந்துள்ளதாக அகில இலங்கை மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த தெரிவித்துள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நோயாளிகள் அத்தியாவசிய மருந்துகளை மட்டுமே வாங்க முற்படுவதால், நாளொன்றிற்கு இரண்டு மருந்துகளை மாத்திரமே வாங்குகின்றனர் எனவும், இன்னும் சில நோயாளிகள் தினமும் உட்கொள்ள வேண்டிய மருந்துகளை இடைக்கிடையே மாத்திரம் உட்கொள்ளத் தொடங்கியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, மருத்துவர்களின் பரிந்துரையின்படி மருந்துகளை உட்கொள்ளாததால் பலர் வீணே உயிரிழக்கும் சம்பவங்கள் 2➤

## இலங்கை வந்துள்ள பிரிட்டன் இளவரசிக்கு சென்னையிலிருந்து மனோவின் கோரிக்கை

இலங்கைக்கும், பிரித்தானியாவுக்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவு தொடர்பில் இலங்கை வந்துள்ள பிரித்தானிய இளவரசி ஆனுக்கு, இலங்கை வாழ் மலையக தமிழர் மற்றும் குறிப்பாக பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் இருக்கின்ற, அவரது பிரித்தானிய முடியரசின் பாரிய கடப்பாட்டை நினைவுறுத்துகின்றேன். இதை சொல்ல இதுதான் சிறந்த வேளை என்பதை தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் உணர்கின்றேன் என்று த.மு.கூ. தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான 2➤



## பரிசுப் பணத்துக்கு ஆசைப்பட்டு 18 இலட்சம் ரூபா பறிகொடுப்பு!

### ஏமாந்துபோன யாழ்ப்பாண வாசி

தனியார் தொலைத்தொடர்பு நிலையத்தினால் நடத்தப்பட்ட பண பரிசு குலுக்கலில், பெருந்தொகை பணம் கிடைத்துள்ளது. அந்த பணத்தை பெற்றுக் கொள்ள 18 இலட்ச ரூபாய் வரி கட்ட வேண்டும். அந்த பணத்தை உடனே வைப்பிலிடுங்கள் என கூறி , 18 இலட்ச ரூபாயை மோசடி செய்த குற்றத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவருக்கு , தொலைபேசியில் தொடர்பு கொண்ட நபர் ஒருவர் , தன்னை தனியார் தொலைத்தொடர்பு 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பொருளாதார ஆயுதங்களையும் இந்தியா தமிழர் தாயகத்திற்கு வழங்கவேண்டும்!

## சென்னையில் சாணக்கியன் எம்.பி. கோரிக்கை

விடுதலைப் போராட்டத்திற்கு முன்னர் ஈழத்தமிழர்களுக்கு ஆயுதங்களை வழங்கிய இந்தியா தற்போதைய சூழ்நிலையில் பொருளாதார மீள்கட்டமைப்பிற்கான ஆயுதங்களையும் தமிழர் தாயகத்திற்கு வழங்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை வர்த்தக மையத்தில் இடம்பெற்ற அயலக தமிழர் தின விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைக்காக தொடர்ந்து போராடிவரும் தாம், தமிழக முதல்வரிடமும் அரசியல் பிரமுகர்களிடமும் மேற்படி கோரிக்கைகளை முன்வைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியா மற்றும் தமிழகத்தின் சிறந்த ஆயுதமான பொருளாதாரத்தை வைத்துக்கொண்டு ஈழத் தமிழர்களான எங்களுக்கு நிம்மதியான சிறந்த



எதிர்காலத்தையும் எமது மக்களின் அபிலாசைகள் மற்றும் உரிமைகளையும் பெற்றுத் தருமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொருளாதாரம் என்னும் ஆயுதம் எதிர்காலத்தில் தமிழர்களின் இருப்பினை வலுப்பெறச்செய்வதற்கான வழியமைத்துக்கொடுக்கும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மேலும் தெரிவித்துள்ளார். (04)

# மொட்டு கூட்டணியே வெற்றிநடை போடும்

## சந்திரசேன எம்.பி. நம்பிக்கை



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையில் அமையும் கூட்டணியே அடுத்த தேர்தல்களில் வெற்றி நடைபோடும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், "அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள நாம் தயார்.

எனினும், வேட்பாளர் குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. வெற்றி வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார். இந்த விடயத்தில் கட்சி எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவேன். அடுத்த பொதுத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையில் அமையும் கூட்டணியே வெற்றி பெறும்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு எதிராக சேறுபூசும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. கப்பல் விவகாரம்கூட இதன் ஓர் அங்கம்தான்." - என்றார். (அ)

### பரிசுப் பணத்துக்கு ஆசைப்பட்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையமொன்றின் பிரதிநிதி என கூறி , தங்கள் நிறுவனத்தால் நடத்தப்பட்ட பரிசு குலுக்கலில் , உங்களுக்கு பெருந்தொகை பணம் விழுந்துள்ளது. அந்த பணத்தினை பெற வரியாக 18 இலட்ச ரூபாயை செலுத்த வேண்டும். 18 இலட்ச ரூபாயை செலுத்தினால் , பரிசு பணத்தினை பெற முடியும் என கூறி, கணக்கிலக்கம் ஒன்றினையும் வழங்கியுள்ளார்.

அதனை நம்பிய நபர் குறித்த கணக்கு இலக்கத்திற்கு 18 இலட்ச ரூபாய் பணத்தினை வைப்பிலிட்டுள்ளார். அதன் பின்னர் தன்னுடன் தொடர்பு கொண்ட இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்த முயன்ற போது , அந்த இலக்கம் செயலிழந்து காணப்பட்டது.

அதனை அடுத்து , குறித்த தனியார் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு சென்று , விசாரித்த போதே தான் ஏமாற்றப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , தென்னிலங்கையை சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மற்றும் தொடர் விசாரணைகளின் அடிப்படையில், கைது செய்யப்பட்ட நபரின் உறவினரான மற்றுமொரு நபரை, மோசடிக்கு துணை போன குற்றச்சாட்டில் கைது செய்துள்ளனர். (01)

### இலங்கை வந்துள்ள பிரிட்டன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனோ கணேசன் கூறியுள்ளார்.

தற்போது சென்னையில் அயலக தமிழர் மாநாட்டில் தமிழக அரசின் அழைப்பின் பேரில் கலந்துகொண்டுள்ள மனோ கணேசன் சென்னையிலிருந்து தனது அதிகாரபூர்வ டுவிட்டர் தள செய்தி மூலம் மேலும் கூறியுள்ளதாவது:-

"இலங்கை, பிரித்தானியா வரலாற்றில் கறுப்புப் பக்கம், பெருந்தோட்ட மக்களின் அத்தியாயம்தான். இலங்கையின் ஏனைய மக்களுடன் ஒப்பிடும்போது கல்வி, சுகாதாரம், காணியுரிமை, வீட்டுரிமை, தொழில் உரிமை ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய தரவுகளைக் கொண்ட தமிழ் பெருந்தோட்ட வதிவாளர்களின், குறை வளர்ச்சி தொடர்பிலான பிரித்தானிய முடியரசின் வரலாற்று கடப்பாட்டை இளவரசி ஆன் ஏற்க வேண்டும்.

நலிவுற்ற பிரிவினரான நமது மக்கள் தொடர்பிலான குற்றச்சாட்டு பட்டியலை இளவரசி ஆன் மீது சுமத்த நான் விரும்பவில்லை. ஆனால், இந்த கறுப்பு பக்கம் தொடர்பான நினைவூட்டலை நான் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

இன்று இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் என்று இன ரீதியாக அழைக்கப்படும் இம்மக்கள், பிரித்தானிய முடியரசின் பிரதிநிதிகளான கிழக்கிந்திய கம்பனியால் 1823ம் ஆண்டு முதல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்கள். இன்றும்கூட, எமது உழைக்கும் மக்கள் பெருந்தோட்ட முகாமை நிறுவனங்களுடன் பின்னி பிணைக்கப்பட்டுள்ளனர்.

பிரித்தானியாவின் வெள்ளை ராஜ்யம் போன பிறகு உள்நாட்டு பிறவுன் ராஜ்யம் பெருந்தோட்டங்களில் எமது மக்களை இன்று ஆள்கிறது. இதனால் இன்னமும் இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக கருதப்படாமல், நமது மக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவின் பாண்டிச்சேரி மக்களுக்கு பிரான்சிய ஆட்சியாளர்கள் செய்து விட்டு சென்ற ஏற்பாடுகளை ஒத்த ஏற்பாடுகளைக்கூட பிரித்தானியா எமது மக்களுக்கு செய்ய வில்லை.

ஆகவே, கடந்த காலங்களில் இழந்துவிட்ட வளர்ச்சியை மீளப்பெறும், விசேட ஒதுக்கீட்டு செயற்திட்டத்தின் அடிப்படையில், இலங்கையின் மிகவும் பின்தங்கிய பிரிவினரான பெருந்தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு உதவிட முன்வருமாறு பிரிதானியாவை நான், இம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப்பெரிய கட்சியின் தலைவர் என்ற முறையில் கோருகின்றேன்.

இன்று உங்களுக்கு பிரித்தானிய தூதுவர் அன்ரூ பெட்றிக் நடத்துகின்ற வரவேற்பு நிகழ்வுக்கு எனக்கு அழைப்பு விடுத்துள்ளார். நான் நாட்டில் இல்லாத காரணத்தால் அதில் கலந்துகொள்ள இயலாமல் இருப்பது அவருக்கு அறிவித்துள்ளேன். எமத கோரிக்கைகள் தொடர்பில் இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதுவரிடம் உரையாடி உள்ளேன். தொடர்ந்தும் உரையாட உள்ளேன்." - என்று மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (அ)

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையில் ஈடுபடுத்தக்கூடிய தரத்திலுள்ள நான்கு விமானங்களையும் மிகக் குறைந்தளவேனும் பழுதுபார்ப்புப் பணிகளுடன் பராமரித்தால், விமான அட்டவணைகள் ரத்து செய்யப்படுவதை கணிசமாகக் கட்டுப்படுத்த முடியும் "- என்றார். (ரெத-35)

### மருந்து வாங்க பணமின்றி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறுவதாகவும், மூன்று வேளையும் உண்ப தற்கே வழியின்றி ஆதரவற்ற நிலையில் உள்ள பெரும்பாலான நோயாளிகள் மருந்து வாங்க பணம் இல்லாதிருப்பதாகவும், பொறுப்பான துறையினர் இது குறித்து கவனத்தில் கொள்வதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெத-34)

### வலிந்து காணாமல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.ஜெனிற்றா இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட தோடு, மற்றைய பெண் அன்றையதினமே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், குறித்த வழக்கானது இன்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப் பட்ட வேளையில் சங்கத்தின் தலைவியை ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவித்து நீதவான் உத்தரவிட்டுள்ளார். (04)






செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தேசபந்து தென்னகோனை பதவி நீக்கம் செய்ய உத்தரவிடுமாறு மனு தாக்கல்



பதில் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றும் தேசபந்து தென்னகோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு உத்தரவிடுமாறும், பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான அவரைப் போன்ற அதிகாரி ஒருவரை பொலிஸ் மா அதிபராக நியமித்தமை மூலம் தாம் உட்பட நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பை வழங்குமாறு கோரியும் சட்டத்தரணி ஹர்ஷன ஜயபாகு விக்கிரமதிலக்க உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரசாங்க சட்டத்தரணியாகவும் கடமையாற்றியுள்ள சட்டத்தரணி ஹர்ஷன விக்ரமதிலகவினால் வழக்கறிஞர் மஞ்சுள பாலசூரிய மூலம் தாக்கல் செய்துள்ள மேற்படி மனுவில், பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலான சட்ட சபை உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். ((ரெத-32)

# போலியாக 'வற்' அறவிடுகின்ற வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை



உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வற் இற்கு பதிவு செய்யாமல் போலியான கட்டண பட்டியல்களை பாவனையாளர்களிடம் வழங்கி அநீதியான முறையில் இலாபம் ஈட்டும் வர்த்தக மாஃபியாக்களுக்கு எதிராக கடுமையான சட்டம் அமுல்படுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பொது மக்களிடமிருந்து பெறுமதிசேர் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு வரிப் பணம் செலுத்தப்படாவிட்டால் அவர்களுக்கு எதிராக வற் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ரெத-30)

# உறுப்பு மாற்று சிகிச்சை திட்டமொன்றை பேராதனை வைத்தியசாலை முன்னெடுப்பு




இறக்கும் நிலையிலுள்ள நோயாளிகளின் முக்கிய உடல் உறுப்புகளை மாற்று சத்திர சிகிச்சை செய்து உயிர்காக்கும் உறுப்பு மாற்று சிகிச்சை திட்டமொன்றை நிறுவுவதற்கு பேராதனை போதனா வைத்தியசாலை ஏற்பாடு செய்துள்ளது.

பல்வேறு காரணங்களால் உயிரிழக்கும் நபர்க ளின் உடல் உறுப்புகளை இப்பிரிவிற்கு தானம் செய்ய முன்வருமாறு வைத்தியசாலையின் குறித்த பிரிவிற்கு பொறுப்பான வைத்திய நிபுணர்கள் கோரிக்கை விடுதுள்ளனர்.

கல்லீரலைக் கூட மாற்று அறுவை சிகிச்சை செய்ய முடியும் என்பதால் அதனை தானம் செய்யும் வாய்ப்பும் வந்துள்ளதாக மருத்துவ நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ரெத-33)

# ஹட்டன் நகரில் "வற்" வரியை காட்டி வியாபாரிகள் மோசடி

ஹட்டன் பிரதேசத்தில் உள்ள சில வர்த்தகர்கள் 'வற்' வரியை காரணம் காட்டி பொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளமையினால் இப்பிரதேச நுகர்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ள கருத்துக்களின்படி,

பல வர்த்தகர்கள் வற் வரியை காணமாகக் கூறி உணவு வகைகளின் விலைகளை பல்வேறு வழிகளில் அதிகரித்து மோசடி வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ரெத-31)



# சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் இஸ்ரேல் மீது இனப்படுகொலை வழக்கு

## இன்றும் விசாரணை தொடர்கிறது



காஸாவில் இஸ்ரேல் இனப் படுகொலையில் ஈடுபடுவதாக தென்னாபிரிக்க அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் விசாரணை, ஐ.நா.வின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

நெதர்லாந்தின் த ஹேக் நகரில் அமைந்துள்ள அந்த நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா தாக்கல் செய்துள்ள மனுவில், காஸாவில் ஹமாஸுக்கு எதிராக போர் நடத்துவதாகக் கூறி, பாலஸ்தீன இனத்தவர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேலும், இனப் படுகொலையைத் தடுப்பதற்காக காஸாவில் நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்த நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தென்னாபிரிக்க நீதித் துறை அமைச்சர் ரொனால்ட் லமோல தகவல் வழங்குகையில், ஒரு நாட்டின் எல்லைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தப்பட்டால், அதற்காக எதிர்வினையாற்றுவது அவசியம்தான்.

ஆனால், அது எத்தகைய கொடூரமான தாக்குதலாக இருந்தாலும், அதைக் கொண்டு சர்வதேச குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக அந்த நாடு செயல்படுவதை நியாயப்படுத்த முடியாது.

தங்கள் நாட்டில் கடந்த ஒக்டோபர் 7 இல் நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல் நடவடிக்கை, சர்வதேச குற்றவியல் சட்டம் வகுத்துள்ள வரம்புகளை மீறிவிட்டது, என்றார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை தொடங்கிய இது தொடர்பான வழக்கு விசாரணையில் தென்னாபிரிக்கா சார்பில் ஆஜரான வழக்குரைஞர் அடிலா ஹாஸிம்,

காஸா பகுதியில் பாலஸ்தீனர்களிடையே கடுமையான உயிர்ச் சேதத்தை ஏற்படுத்துவதையும், அந்தப் பகுதி மக்களை பஞ்சத்தின் பிடியில் சிக்கவைப்பதையும் நோக்கமாகக் கொண்டு அந்தப் பகுதியில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

ராணுவ நடவடிக்கைகளை இனப் படுகொலை என்று முன்கூட்டியே அறிவிக்க முடியாதுதான். இருந்தாலும், காஸாவில் இஸ்ரேல் கடந்த 13 வாரங்களாக நடத்தி வரும் தாக்குதலின் போக்கு, நோக்கம் ஆகியவற்றை கவனித்தால் அது இன அழிப்பு என்பதை சந்தேகமில்லாமல் புரிந்துகொள்ள முடியும், என்று வாதிட்டார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை இஸ்ரேல் திட்டவட்டமாக மறுத்து வருகிறது.

இது குறித்து அந்த நாட்டின் அதிபர் ஐசக் ஹெர்ஸாக் கூறுகையில், தென்னாபிரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டு அடாவடியானதும், நகைப்புக்குரியதும் ஆகும், என்றார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் விசாரணையின்போது இந்தக் குற்றச்சாட்டை எதிர்த்து தங்களது வழக்குரைஞர் குழு வாதாடும், என்று அவர் தெரிவித்தார்.

காஸாவில் மிக இக்கட்டான சூழலில் இஸ்ரேல் ராணுவம் செயல்பட்டு வருவதாகவும், அங்கு பொதுமக்கள் உயிரிழப்பைத் தவிர்ப்பதற்காக தங்களால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் ராணுவம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த வழக்கின் விசாரணை பல ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேலுக்குள் தரை, கடல், வான் வழியாக கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி நுழைந்த ஹமாஸ் படையினர், அங்கு சுமார் 1,200 பேரை படுகொலை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அதையடுத்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக்கட்டுவதாக சூளுரைத்துள்ள இஸ்ரேல், காஸா பகுதியில் வான்வழியாகவும், தரைவழியாகவும் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

காஸாவில் குண்டுவீச்சுக்கு முன்னதாக அந்தப் பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாக இஸ்ரேல் கூறினாலும், தங்களால் பாதுகாப்பான பகுதி என்ற அறிவிக்கப்பட்ட இடங்களிலும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதலில் இதுவரை 23,357 பேர் உயிரிழந்துள்ளனர். 59,410 பேர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பொதுமக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# மாலைதீவின் உள்விவகாரங்களில் அந்நிய தலையீட்டுக்கு சீனா எதிர்ப்புத் தெரிவிப்பு



மாலைதீவின் உள்விவகாரங்களில் அந்நிய தலையீடுகளுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள சீனா, நாட்டின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்தை நிலைநிறுத்துவதில் மாலைதீவுக்கு ஆதரவு அளிப்பதாகவும் அறிவித்துள்ளது.

மாலைதீவின் புதிய அதிபராக கடந்த நவம்பரில் பதவியேற்ற முகமது மூயிஸ், சீனாவுக்கு முதல்முறையாக அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தில் சீன அதிபர் ஷி ஜின்பிங்கை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தையில் அவர் ஈடுபட்டார். இந்தப் பேச்சுவார்த்தையின்போது இரு நாடுகளுக்கு இடையே 20 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

இந்நிலையில், மாலைதீவு அதிபரின் சீனப் பயணத்தையொட்டி வியாழக்கிழமை வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், இரு நாடுகளின் நலன்களைப் பாதுகாப்பதில் தொடர்ந்து உறுதியான ஆதரவை வழங்க இருதரப்பும் ஒப்புக்கொண்டுள்ளன.

தேசிய இறையாண்மை, சுதந்திரம், கண்ணியம் மற்றும் மரியாதை ஆகியவை நிலைநிறுத்தப்படுவதில் மாலைதீவுக்கு சீனா ஆதரளிக்கும். அந்நாட்டுச் சூழலுக்கேற்ப வளர்ச்சிப் பாதையை ஆராய்வதில் மாலைதீவுக்கு சீனா உதவி செய்யும். அந்நாட்டின் உள்விவகாரங்களில் அந்நிய தலையீடுகளை சீனா கடுமையாக எதிர்க்கும்.

சீனாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைக் குறைத்து மதிப்பிடும் எந்தவொரு செயலையும் மாலைதீவு எதிர்க்கிறது. தாய்வான் பிரிவினைவாத நடவடிக்கைகளை எதிர்க்கும் மாலைதீவு, அந்தப் பிராந்தியத்துடன் எந்த வகையான ராஜிய உறவுகளையும் வளர்க்காது. தேசிய மறு ஒருங்கிணைப்பை அடைய சீனா முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளையும் மாலைதீவு ஆதரிக்கிறது.

'சீனா-மாலைதீவுகள் விரிவான உத்தி சார்ந்த கூட்டுறவை' உருவாக்குவதற்கான செயல்திட்டத்தில் இருதரப்பினரும் கையொப்பமிட்டனர்.

பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, பசுமை மேம்பாடு, உள்கட்டமைப்பு கட்டுமானம் மற்றும் மக்களுக்கு வாழ்வாதார உதவி போன்ற துறைகளில் ஒத்துழைப்புக்கான ஆவணங்களும் கையொப்பமாகின, எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியா மற்றும் அதன் பிரதமர் மோடிக்கு எதிராக சமூக ஊடகத்தில் வெளியிட்ட அவதூறுக் கருத்துகளால் மாலைதீவு இணையமைச்சர்கள் மூவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த அதிபர் தேர்தலில், இந்திய விரோதப்போக்குப் பிரசாரத்தில் தற்போதைய ஆளும் கூட்டணி ஈடுபட்டதாகவும் ஐரோப்பிய ஒன்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மாலைதீவு அதிபரின் சீனப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (04)

# ஆப்கானிஸ்தானில் இன்று காலையில் மீண்டும் நிலநடுக்கம் - அச்சத்தில் மக்கள்



ஆப்கானிஸ்தானில் இன்று காலையில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டின் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இன்று காலை 4.51 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 4.3 அலகுகளாகப் பதிவாகியுள்ளது.

பூமிக்கடியில் சுமார் 17 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. ஆயினும், இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து எந்த வித தகவலும் வெளிவரவில்லை.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆப்கானிஸ்தானின் ஹெராத் பகுதியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சிக்கி 4,000 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருவதால் அந்நாட்டு மக்கள் அச்சமடைந்துள்ளனர். (04)

# டிசம்பர் மாதத்தில் மட்டும் கொரோனாவால் 10,000 பேர் வரை உயிரிழந்ததாக அறிவிப்பு

## உலக சுகாதார அமைப்பு தகவல்

கடந்த டிசம்பர் மாதம் மட்டும் கொரோனா பாதிப்பால் உலகம் முழுவதும் 10,000 பேர் வரை உயிரிழந்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் பொது இயக்குநர் டெட்ரெஸ் அதனோம் கப்ரியாசஸ் கூறுகையில், 'புதிய வகை கொரோனா பரவலால் கடந்த மாதத்தில் மட்டும் 10,000 பேர் வரை உயிரிழந்தனர்.

விடுமுறைக் காலத்தில் பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் கூடியதாலும் கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை கடந்த மாதம் திடீரென அதிகரித்துள்ளது.

கொரோனாவின் தீவிர பரவல் காலத்து மாதாந்திர சராசரி மரணங்களைவிட இது குறைவாக இருந்தாலும், தற்போதைய சூழலில் இத்தனை பேர் உயிரிழந்திருப்பது ஏற்புடையது அல்ல' என்றார். (04)

# கல்முனையில் அனர்த்தங்களைக் கட்டுப்படுத்த மாநகர சபை துரித நடவடிக்கை எடுத்துள்ளது!

## ஊழியர்களின் விடுமுறைகளும் இரத்தாகின

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர பிரதேசங்களில் வெள்ள அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கல்முனை மாநகர சபை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

கடந்த பல தினங்களாக தொடர்ச்சியாக பெய்த கனத்த மழை காரணமாக, சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகளும் திறக்கப்பட்டதால் கல்முனை மாநகர பிரதேசங்களிலும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் குளங்களை அண்டிய மற்றும் தாழ்நிலப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில், இப்பகுதிகளில் வெள்ள அனர்த்தங்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியின் ஆலோசனை, வழிகாட்டலில், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜௌஸியின் நெறிப்படுத்தலில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாநகர சபையினால் முகத்துவாரங்கள் யாவும் திறக்கப்பட்டுள்ள நிலையில் வெள்ள நீரை வடிந்தோடச் செய்வதற்காக வடிகான்கள் மற்றும் தோனாக்களில் காணப்படும் தடைகள் கனரக வாகனங்களின் உதவியுடன் அகற்றப்பட்டு வருகின்றன.

தோனா உட்பட பல்வேறு இடங்களிலும் முறிந்து வீழ்ந்துள்ள பாரிய மரங்களும் அகற்றப்பட்டு வருகின்றன.



இப்பணிகளில் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி சம்மந்தப்பட்ட இடங்களுக்கு கண்காணிப்பு விஜயங்களை மேற்கொண்டு களப்பணிகளை துரிதப்படுத்தி வருகின்றார்.

வெள்ள அனர்த்த நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு கல்முனை மாநகர சபையின் பொறியியல் பிரிவு வேலைத் தொழிலாளர்களின் விடுமுறைகள் யாவும் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 12 வருடங்களுக்கு பிறகு காரைதீவு பிரதான வீதி வெள்ளக்காடானது!

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த 12 வருடங்களுக்கு பிறகு காரைதீவு பிரதான வீதி வெள்ளத்தின் மூழ்கியுள்ளது. சேனநாயக்கா சமுத்திரத்தின் வான்கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டதால் இந்த வெள்ளம் பரவுகிறது.

இதற்கு முன்னர் அண்மைய இறுதியாக 2010 ஆம் ஆண்டில் இத்தகையதொரு வெள்ளம் பரவியிருந்தது. மக்கள் சிரமத்திற்கு மத்தியில் பயணிப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

காரைதீவு அக்கரைப்பற்று வீதி காரைதீவு அம்பாறை வீதிகளில் வெள்ளம் பாய்வதால் காலையில் போக்குவரத்துக்கு பொலிசார் அனுமதிக்கவில்லை. பின்னர் பாரிய வாகனங்கள் செல்ல அனுமதித்தனர்.

இதேவேளை காரைதீவு மாவடி பள்ளி வீதி முற்றாகவே அமிழ்ந்திருக்கின்றது. காரைதீவுக்குள் புகுந்த



வெள்ளம் இப்பொழுதும் வீடு மனைகளிலேயே நின்று கொண்டிருக்கின்றது. மக்கள் பலத்த அசௌகரியத்துடன் நாட்களை கடத்துவதாகத் தெரிவிக்கின்றனர்.

தைப்பொங்கல் பண்டிகை கொண்டாட்டத்தில் எவ்வாறு எதிர்கொள்வதென்பது புரியாமல் வெள்ளப் பீதியில் ஆழ்ந்துள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

# கதிர்காமம் பிரதேசத்தில் பயிரிடப்பட்டிருந்த 6,50,000 கஞ்சாச் செடிகள் தீயிட்டு அழிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கதிர்காமம், கெபிலித்த தெற்கு பிரதேசத்தில் புத்தள விசேட பொலிஸ் அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், 5 ஏக்கரில் சூட்சுமமான முறையில் பயிரிடப்பட்டிருந்த 10 அடி உயரமான கஞ்சா செடிகள் ட்ரோன் தொழிநுட்பத்தை பயன்படுத்தி அடையாளம் கண்டு கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கெபிலித்த தெற்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை குறித்து புத்தள விஷேட பொலிஸ் அதிரடிப்படை பொறுப்பதிகாரி பீ.எஸ்.ஆர். கீததேவ தகவல் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி வருண ஜயசுந்தரவின் பணிப்புரையின் பேரில் மொனராகல பிராந்திய பொறுப்பு பொலிஸ் அதிகாரி குணசிறி, பிரதி பொலிஸ் அதிகாரி அசோக ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் 10 கஞ்சாச் செடிகள் விசாரணைக்காகவும் பரிசீலனைக்காகவும் எடுக்கப்பட்டு எஞ்சிய 6,50,000 செடிகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதாகவும் குறித்த அதிரடிப் படை பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# கந்தளாய் வான் கதவு திறப்பு விவசாயிகள் கடும் பாதிப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணாமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை காரணமாகவும் கந்தளாய் குளத்தின் 10 வான் கதவு திறக்கப்பட்டுள்ளதனாலும் ஏராளமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கிண்ணியா பிரதேச செயலாளார் பிரிவுக்குட்பட்ட வன்னியனார்மடு, புளியடிக்குடா முதலான பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்களே இவ்வாறு நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இப்பகுதியில் சுமார் 2000க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் பெரும் போக வேளாண்மை செய்கை பண்ணப் பட்டுள்ளது. இவ்வாறு செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்களே கந்தளாய் குளத்தின் வான் கதவு திறக்கப்பட்டுள்ளதனால் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் செய்கை பண்ணப்பட்ட வயல் இம்முறையும் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

கந்தளாய் குளத்தின் 10 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது. கதிர் புடலை நெல் வருகின்ற காலப்பகுதியில் நீர் அதனுள் புகுந்தால் எவ்வித பயனும் இல்லை.

கடன்பட்டுத்தான் வேளாண்மை செய்தோம். எங்களுக்கு இதற்குரிய நஷ்ட ஈடு வழங்கப்பட வேண் டும். படிச்சல் வாய்க்கால் இல்லாததனால் இந்த நிலைமை ஏற்பட்டு வருகின்றது.

வெள்ள நீரினால் வேளாண்மை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது பல்லாயிரக்கணக்கான வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கதிர் குடலை பருவம் நெல் வருகின்ற நேரத்தில் இவ்வாறு மழை பெய்தால் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். விவசாயிகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்.

எண்ணெய் ,பசளை போன்றவற்றின் விலை உள்ள நிலையில் இவ்வாறு செலவு செய்ததுதான் இந்த வேளாண்மையை செய்தோம். அரசு வாக்குறுதி அளித்தபடி பசளை வாங்குவதற்கான காசு கூட இன்னும் தரப்படவில்லை, எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.




யாழ் முற்றம்
Face of Jaffna
கறுவா, சந்தனம், கராம்பு,
கோப்பி, கொக்கோ, மிளகு
ஆகிய மரக்கன்றுகள்
விற்பனைக்கு உள்ளன.
076 443 8620
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH
JITF 2024
14TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR
14TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR 2024
ORGANIZED BY
LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM CCIY UNITY IS STRENGTH
PLATINUM SPONSOR
DIMO THE PERFECT PARTNER
GOLD SPONSORS
ADRIAN SOLAR GREEN
ADRIAN SOLAR GREEN
NIPPON CEMENT
SILVER SPONSORS
Anchor Since 1886
SOORYA
Hayleys Solar
Ruhunu
4ever SKIN NATURALS
TJC Mango
Darley Butler
Elephant House
KEELLS KREST
PHOENIX
RHINO 60 YEARS
CBL Sera
MEDIA SPONSORS
PRINT
உதயன்
TELEVISION
Capital TELEVISION
ELECTRONIC
SOORIYAN FM சூரியன் FM 103.6 / 103.4 FM
DIGITAL
காலைக்கதிர்
IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com
www.jitf.lk
jitf.lk






# யாழ் நல்லூரில் முதியவர் சடலமாகக் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம் - நல்லூர் சட்டநாதர் கோவில் பகுதியில் முதியவரொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் இன்று (12) சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், தடயவியல் பொலிஸார் உள்ளிட்டோர் விஜயம் செய்து பார்வையிட்டு விசாரணையில் ஈடுபட்டனர்.

விஸ்வநாதப்பிள்ளை யோகேந்திரன் என்ற 62 வயதானவரே இவ்வாறு நேற்று (11) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழப்பு இடம்பெற்று சில தினங்களாகி இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் மகன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய தகவலுக்கமைய சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொலையா, தற்கொலையா? என்பது விசாரணைகளின் பின்னரே தெரியவரும் என பொலிஸார் தெரிவித்தனர். (O1)

# அம்பாறை மாவட்ட அரச அதிபர் குழு வெள்ளப் பாதிப்பை பார்வையிட்டது



(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தென்கிழக்கு பல்கலைக் கழகம் மற்றும் ஏனைய பகுதிகளை பார்வையிட அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, அம்பாரை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம். ஏ. சி. முஹம்மது றியாஸ், அம்பாரை மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எச். ஏ அனீஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர்

எம். ஏ. சி. அகமது ஷாபிர், உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர் அக்கரைப்பற்று பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அக்கீல் அஹமட் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் இன்று களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்கள்.

தென்கிழக்கு பல்கலைக்கழக காரியாலயத்தில் இருந்த ஆவணங்கள் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படக் கூடிய பொருட்கள் ஆகியன பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட் JRIDE

## TAXI APP FROM JAFFNA

இலங்கை முழுவதும் | Islandwide

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

DOWNLOAD PASSENGER APP:

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

**விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?**

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 0706563213

JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!